


**TNPSC GROUP 2/2a PRELIMS TEST BATCH AVAILABLE**

**FOR MORE DETAILS : WHATSAPP – 8438233722 : CLICK HERE**

# எட்டாம் வகுப்பு தமிழ் இயல் – 1

1.செய்யுளுக்கும் மரபுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி கூறும் நூல் எது ?
A) அகத்தியம் B) தொல்காப்பியம்
C) திருக்குறள் D) நன்னூல்

2.சிந்துக்குத் தந்தை என்று போற்றப்படுபவர் யார்?
A) பாரதிதாசன் B) பாரதியார்
C) நாமக்கல் கவிஞர் D) வாணிதாசன்

3.கூற்றுகளை ஆராய்க
1. செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படுபவர் – இரா. இளங்குமரனார்
2. இவர் திருச்சிக்கு அருகில் அல்லூரில் விவேகானந்தர் தவச்சாலையும், திருவள்ளுவர் நூலகமும் அமைத்துள்ளார்.
A) 1 மட்டும் சரி B) 2 மட்டும் சரி
C) இரண்டும் தவறு D) இரண்டும் சரி

4.இரா. இளங்குமரனார் எழுதிய நூல்களில் பொருந்தாது எது?
A) இலக்கண வரலாறு B) தமிழிசை இயக்கம்
C) தனித்தமிழ் இயக்கம் D) தேவநேயம்

5.நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துக்கள் எது ?
A) க், ங் B) ச், ஞ் C) ட், ண் D) ப், ம்

6.தமிழில் நமக்கு கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் எது?
A) அகத்தியம் B) நன்னூல்
C) அகப்பொருள் விளக்கம் D) தொல்காப்பியம்

7.பொருத்துக.
அ. வல்லின மெய் எழுத்துக்கள்(6) – 1. மூக்கு
ஆ. மெல்லின மெய் எழுத்துக்கள்(6) – 2. மார்பு
இ. இடையின மெய் எழுத்துக்கள்(6) – 3. கழுத்து
A) 1, 2, 3 B) 2, 3, 1 C) 2, 1, 3 D) 3, 1, 2

8.தொல்காப்பியம் எத்தனை அதிகாரங்களை கொண்டுள்ளது?
A) 2 B) 3 C) 5 D) 4

9.உயிர் மெய் நெட்டெழுத்துக்கள் எத்தனை?
A) 216 B) 126 C) 247 D) 18

10.ஓரெழுத்து மொழி என்பது நெட்டெழுத்துகள் ஏழே என்று கூறியவர் யார்?
A) தொல்காப்பியர் B) அகத்தியர்
C) நன்னூலார் D) பவணந்தி முனிவர்

11.திருவள்ளுவர் தவச்சாலையை நிறுவியர் யார்?
A) துரை. மாணிக்கம் B) பெருஞ்சித்தனார்
C) டி. கே. சிதம்பரனார் D) இரா. இளங்குமரனார்

12.மறம் பாட வந்த மறவன் – இதில் மறவன் என்று குறிப்பிடப்படுபவர்?
A) பாரதிதாசன் B) வீரமாமுனிவர்
C) பாரதியார் D) கண்ணதாசன்

13.இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமை – இதில் குறிப்பிடப்படும் இருதிணை எது?
A) அகத்திணை, புறத்திணை
B) குறிஞ்சித் திணை, முல்லைத் திணை
C) வெட்சித்திணை, வஞ்சித்திணை
D) உயர்திணை, அஃறிணை

14.பாரதியாருக்கு பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க?
A) சிந்துக்குத் தந்தை B) செந்தமிழ்த் தேனீ
C) புதிய அறம் பாட வந்த அறிஞன் D) தமிழ்த் தாத்தா

15.எழுத்துக்களில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் யார்?
A) தந்தை பெரியார் B) கால்டுவெல்
C) ஈராஸ்பாதிரியார் D) வீரமாமுனிவர்

16.கூற்று: ஓலைகளில் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர்
காரணம்: ஓலைகளில் நேர்க்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது எளிது.
A) கூற்று சரி காரணம் தவறு
B) கூற்று தவறு காரணம் சரி
C) கூற்று, காரணம் இரண்டும் சரி. கூற்று காரணத்தை விளக்குகிறது
D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் கூற்று காரணத்தை விளக்க வில்லை

17. மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை – என்று செய்யுளுக்கு இலக்கணம் வகுத்தவர் யார் ?
A) அகத்தியர் B) தொல்காப்பியர்
C) பவணந்தி முனிவர் D) வீரமாமுனிவர்

18.புதிய அறம் பாட அறிஞன் என்று பாராட்டப்படுபவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன்
C) வாணிதாசன் D) கண்ணதாசன்

19.தமிழ் எழுத்துக்களில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் யார் ?
A) தந்தை பெரியார் B) வீரமாமுனிவர்
C) கால்டுவெல் D) ஈராஸ்பாதிரியார்

20.கூற்றுகளை ஆராய்க.
1. வட்டெழுத்து என்பது நேர்க்கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும்.
2. தமிழெழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துக்களின் பழைய வரி வடிவம் ஆகும்
A) 1 மட்டும் சரி B) 2 மட்டும் சரி
C) இரண்டும் சரி D) இரண்டும் தவறு

21. "நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்" என்று கூறும் நூல் எது?
A) அகத்தியம் B) பரிபாடல்
C) திருக்குறள் D) தொல்காப்பியம்

22. "நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்" இதில் விசும்பு என்ற சொல்லின் பொருள் என்ன ?
A) வானம் B) விண்மீன்
C) கோள்கள் D) பூமி

23.பாரதியார் பற்றிய கூற்றகளை ஆராய்க.
1. கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்த்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப்போராட்ட வீரர்.
2. இயற்பெயர் சுத்தானந்த பாரதியார்
3. இந்தியா, விஜயா போன்ற நூல்களை எழுதியுள்ளார்.
4. சந்திரிகையின் கதை, தராசு போன்ற காப்பியங்களையும் எழுதியுள்ளார்
A) 1, 4 மட்டும் சரி B) 1, 2 மட்டும் சரி
C) 1, 2, 4 சரி D) 2, 3, 4 தவறு

24.தமிழ் எழுத்துக்கள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற___காரணமாக அமைந்தது.
A) ஓவியக்கலை B) இசைக்கலை
C) அச்சுக்கலை D) நுண்கலை

**TNPSC GROUP 2/2a PRELIMS TEST BATCH AVAILABLE**
**FOR MORE DETAILS : WHATSAPP – 8438233722 : CLICK HERE**

25.கூற்று: தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் செய்தார்
காரணம்: தமிழ் மீது ஏற்பட்ட ஆர்வம்
A) கூற்று சரி காரணம் தவறு
B) கூற்று தவறு காரணம் சரி
C) கூற்று, காரணம் இரண்டும் சரி. கூற்று காரணத்தை விளக்குகிறது
D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் கூற்று காரணத்தை விளக்கவில்லை.

26.ஏகலைவன் என்பது எதில் வல்லவன் எனக் குறிக்கிறது?
A) கட்டிடம் கட்டுதல் B) அம்புவிடுதல்
C) மொழித்திறன் உடையவர் D) எழுத்துச் சீர்திருத்தம் செய்பவர்

27.வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழமையான தமிழ் எழுத்து____என அழைக்கப்படுகிறது.
A) கோட்டெழுத்து B) வட்டெழுத்து
C) சித்திர எழுத்து D) ஓவிய எழுத்து

28.கல்வெட்டுகள், செப்பேடுகளில் காணப்படும் வரிவடிவங்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
A) 2 B) 3 C) 4 D) 5

29.செந்தமிழ்த் தேனீ என்று பாரதியாரை புகழ்ந்தார் யார் ?
A) சுப்புரத்தின தாசன் B) வாணிதாசன்
C) பாரதிதாசன் D) கண்ணதாசன்

30.எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை எது ?
A) வரி வடிவம் B) சைகை
C) குறியீடு D) இலக்கணம்

31.வான மளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே! – இதில் இடம்பெற்றுள்ள வண்மொழி என்னும் சொல்லின் பொருள் என்ன ?
A) வலிமையான மொழி B) வளமிக்க மொழி
C) வளர்ந்த மொழி D) வளமை குன்றிய மொழி

32.செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படுபவர் யார்?
A) பாரதிதாசன் B) வாணிதாசன்
C) பெருஞ்சித்தனார் D) இரா. இளங்குமரனார்

33.மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் எது ?
A) வைப்பு B) கடல் C) பரவை D) ஆழி

34.மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை – இதில் திரிதல் என்ற சொல்லின் பொருள் என்ன ?

A) மாறுபடுதல்
B) செல்லுதல்
C) கலவை
D) கெட்டுபோதல்

35.உயிரளபெடை எத்தனை வகைப்படும்?

A) 3 B) 4 C) 5 D) 6

36.கூற்று: பாறைகளில் நேர்கோடுகள் பயன்படுத்தப்பட்டன.
காரணம்: வளைகோடுகளை பயன்படுத்த முடியாது

A) கூற்று சரி, காரணம் தவறு
B) கூற்று தவறு, காரணம் சரி
C) கூற்று, காரணம் இரண்டும் சரி. கூற்று காரணத்தை விளக்குகிறது
D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் கூற்று காரணத்தை விளக்கவில்லை.

37.அளபெடை எத்தனை வகைப்படும்?

A) 2 B) 3 C) 4 D) 5

38.எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை என்ன ?

A) வரி வடிவம்
B) சைகை
C) குறியீடு
D) இலக்கணம்

39.கல்வெட்டுகள் எந்த நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன?

A) கி. மு. 3
B) கி. பி. 3
C) கி. மு. 7
D) கி. பி. 7

40.நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துக்கள் எது ?

A) க், ங்
B) ச், ஞ்
C) ட், ண்
D) ப், ம்

41.இடப்பிறப்பில் பொருந்தாத ஒன்றை தெரிவு செய்.

A) மார்பு
B) தலை
C) கழுத்து
D) நாக்கு

42. மா என்ற ஓரெழுத்து ஒரு மொழிக்கு பொருத்தமானது?

A) பறவை
B) விலங்கு
C) மனிதன்
D) உலகம்

TNPSC PRE COACHING

43.எகர வரிசை உயிர்மெயக் குறில் எழுத்துக்களை அடுத்து இரு புள்ளிகள் இடப்பட்டால் அவை____எழுத்துகளாக கருதப்பட்டன.

A) ஐகார
B) ஔகார
C) மகர
D) ஆய்த

44.மனிதனின் முதல் கண்டுபிடிப்பு எது ?

A) ஓவியம்
B) மொழி
C) எழுத்து
D) சைகை

45.ஓரெழுத்து ஒரு மொழியில் இடம்பெற்றுள்ள நெடில் எழுத்துக்களின் எண்ணிக்கை என்ன ?

A) 2 B) 42 C) 30 D) 40

46.கல்வெட்டுகளில் உள்ள எழுத்துக்களின் அமைப்பு முறை பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. ஸ என்னும் வடமொழி எழுத்து காணப்படவில்லை
2. மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை
3. எகர, ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை

A) 1, 2 சரி
B) 2, 3 சரி
C) 1, 3 சரி
D) அனைத்தும் சரி

47.மாஞாலம் – இச்சொல்சொலிலுள்ள ஞாலம் என்பதன் பொருள்?

A) நாடு
B) கண்டம்
C) உலகம்
D) கடல்

48.அம்பை எய்பவர் எயினர். அவர்தம் மகளிர்____?

A) எயிற்றி
B) எயினி
C) எயினியர்
D) எயினியி

49.தமிழில் சொல் என்பதற்கு____என்று பொருள்.

A) பதர்
B) பொருள்
C) எழுத்து
D) நெல்

50.முள்ளம்பன்றியின் பழம்பெயர் என்ன ?

A) ஏய்ப்பன்றி
B) எய்ப்பன்றி
C) எயிற்றுபன்றி
D) எயிறுப்பன்றி

**TNPSC GROUP 2/2a PRELIMS TEST BATCH AVAILABLE**
**FOR MORE DETAILS : WHATSAPP – 8438233722 : CLICK HERE**